1. கம்பராமாயணத்தில் தசரதனுக்கு இறுதி சடங்கினை செய்தவர் யார்?

(A) இராமன்
(B) பரதன்
(C) சத்ருக்கனன்
(D) ஆதிசேடன்
(E) விடை தெரியவில்லை

2. கீழ்வருவனவற்றுள் கம்பர் எழுதாத நூல்

(A) ஏர் எழுபது
(B) கார் நாற்பது
(C) சரசுவதி அந்தாதி
(D) சடகோபர் அந்தாதி
(E) விடை தெரியவில்லை

3. பாலகாண்டத்தில் இடம் பெற்றுள்ள படலங்கள் எத்தனை?

(A) 22
(B) 12
(C) 11
(D) 16
(E) விடை தெரியவில்லை

4. பெரியபுராண உட்பிரிவுகளுக்குச் சேக்கிழார் இட்டுள்ள பெயரைச் சுட்டுக.

(A) காதை
(B) சருக்கம்
(C) படலம்
(D) இலம்பகம்
(E) விடை தெரியவில்லை

5. இராமாயணத்தில் சுந்தரன் என்னும் பெயரால் அழைக்கப்படுபவர்

(A) இராமன்
(B) அனுமன்
(C) இலக்குவன்
(D) விபீடணன்
(E) விடை தெரியவில்லை

6. "வஞ்சியென நஞ்சமென வந்த வஞ்சமகள்" என்று கம்பராமாயணத்தில் குறிப்பிடப்படுபவள்.

(A) தாரை

(B) சூர்ப்பனகை

(C) மண்டோதரி

(D) கூனி

(E) விடை தெரியவில்லை

7. பெரியபுராணத்துக்குச் சேக்கிழார் இட்ட பெயர்

(A) அடியவர் புராணம்

(B) திருத்தொண்டர் புராணம்

(C) நாயன்மார் புராணம்

(D) சிவத்தொண்டர் புராணம்

(E) விடை தெரியவில்லை

8. மதுரைக்குச் செல்லும் வழியினை கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் யாரிடம் வழி திறனை கேட்டனர்?

(A) கோச்செங்கன்

(B) தேவந்தி

(C) மாங்காட்டு மறையோன்

(D) சாதுவன்

(E) விடை தெரியவில்லை

9. "முள்ளுடைக் காட்டில் முதுநரி ஆகுக" என்று கூறியவர்

(A) கவுந்தியடிகள்

(B) கண்ணகி

(C) மாங்காட்டு மறையோன்

(D) மாதவி

(E) விடை தெரியவில்லை

10. தமிழ்மொழியின் இலியதும் ஒடிசியுமாக இலங்கும் காப்பியம் என்று ஜி.யு. போப்பால் போற்றப்படுவது.

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவக சிந்தாமணி

(D) வளையாபதி

(E) விடை தெரியவில்லை

11. பின்வரும் மணிமேகலைத் தொடர்களை அது இடம்பெறும் காதைகளுடன் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பசியும் பிணியும் பகையும் நீங்கி<br>பசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி | 1. | பாத்திரம் பெற்ற காதை |
| (b) | புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்<br>இதுவோ அன்னாய் காமத்தியற்கை | 2. | சிறைவிடு காதை |
| (c) | உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே | 3. | விழாவறை காதை |
| (d) | எவ்வுயிர்க்காயினும் இரங்கல் வேண்டும் | 4. | மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

12. “சிந்தாமணியின் சரிதம் சிதர்ந்தேன்” என்று கூறியவர்

(A) இளங்கோவடிகள்
(B) சீத்தலைச் சாத்தனார்
(C) திருத்தக்க தேவர்
(D) தோலாமொழித்தேவர்
(E) விடை தெரியவில்லை

13. “இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து” என்று கூத்துவகைகளைக் குறிப்பிடும் நூல்

(A) கூத்தராற்றுப்படை
(B) நெடுநல் வாடை
(C) சிலப்பதிகாரம்
(D) புறநானூறு
(E) விடை தெரியவில்லை

14. இந்திர விழா நடைபெறும் நாட்களாக மணிமேகலையில் குறிப்பிடப்பெறும் நாட்கள் எத்தனை?

(A) 82
(B) 28
(C) 18
(D) 12
(E) விடை தெரியவில்லை

15. பாரதக் கதையை நொண்டிச் சிந்தில் காப்பியமாக்கியவர் யார்?

(A) இளங்கோவடிகள்
(B) தோலாமொழித்தேவர்
(C) பெருந்தேவனார்
(D) பாரதியார்
(E) விடை தெரியவில்லை

16. ‘சிறு காப்பியங்கள்’ அவ்வாறு அழைக்கப்படுவதன் காரணம்

(A) அளவில் சிறியதாக இருப்பதால்

(B) அறம், பொருள், இன்பம், வீடுபேறு இருப்பதால்

(C) அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவற்றில் ஒன்று குறைவதால்

(D) பெருங்காப்பியங்களுக்கு அடுத்து இருப்பதால்

(E) விடை தெரியவில்லை

17. ‘காலக் கவி’ என்று கூறப்படும் நூல்

(A) நீலகேசி

(B) குண்டலகேசி

(C) வளையாபதி

(D) சூளாமணி

(E) விடை தெரியவில்லை

18. சீவகனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்

(A) அச்சணந்தி

(B) கந்துக்கடன்

(C) சச்சந்தன்

(D) அனைத்தும் சரி

(E) விடை தெரியவில்லை

19. சிலப்பதிகாரம் கூறும் மதுரையின் காவல் தெய்வம்

(A) அம்மன்

(B) மதுராபதி

(C) சிவன்

(D) கருப்பண்ணசுவாமி

(E) விடை தெரியவில்லை

20. மூன்று காரணிகளின் அடிப்படையில் எழுந்த காப்பியம் எது?

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) சீவக சிந்தாமணி
(D) குண்டலகேசி
(E) விடை தெரியவில்லை

21. கைக்கிளைக்குரிய தலைமக்கள் யாவர்?

(A) வேளாளர்
(B) வணிகர்
(C) அரசர், அந்தணர்
(D) நால் வருணத்தாரும்
(E) விடை தெரியவில்லை

22. அகப்பொருட்குரிய திணைகள்

(A) எட்டு
(B) பன்னிரண்டு
(C) ஏழு
(D) பத்து
(E) விடை தெரியவில்லை

23. கீழ்க்காணும் அகத்திணைகளைத் தொல்காப்பியம் வழி வரிசைப்படுத்துக.

1. குறிஞ்சி
2. மருதம்
3. முல்லை
4. நெய்தல்

(A) 3 – 1 – 2 – 4
(B) 1 – 2 – 3 – 4
(C) 1 – 3 – 2 – 4
(D) 1 – 4 – 3 – 2
(E) விடை தெரியவில்லை

24. அகத்திணைக்குப் புறமாகும் புறத்திணைகளைப் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | 1. | உழிஞை |
| (b) | முல்லை | 2. | தும்பை |
| (c) | மருதம் | 3. | வெட்சி |
| (d) | நெய்தல் | 4. | வஞ்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

25. 'இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றுஎறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே'

– இப்பாடலில் இடம்பெற்ற உணர்ச்சி யாது ?

(A) ஓம்படைக் கிளவி
(B) இயன்மொழி
(C) புறநிலை வாழ்த்து
(D) கையறுநிலை
(E) விடை தெரியவில்லை

26. 'யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்ப
முறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்
எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகரமன்றது ——————'

(A) ஓர் ஆகுபெயராகும்
(B) ஒன் அன்மொழியாகும்
(C) ஒரு பண்புப்பெயராகும்
(D) ஒரு பொருட்பெயராகும்
(E) விடை தெரியவில்லை

27. முதற்பொருள் என்பது

(A) புள், பறை
(B) செய்தி, யாழ்
(C) நிலம், பொழுது
(D) கரு, உரி
(E) விடை தெரியவில்லை

28. அகப்பொருளில் குறிப்பிடப்படும் 'வாயிலோர்' என்பவர் யார்?

(A) காவலர்
(B) ஊடல் நீக்குபவர்
(C) வழிப்போக்கர்
(D) கண்டோர்
(E) விடை தெரியவில்லை

29. மறுஇல் தூவிச் சிறுகருங் காக்கை
வெஞ்சின விறல்வேல் காளையோடு
அஞ்சில் ஓதியை வரக் கரைந்தீமே – தலைவி உடன்போக்குச் சென்றபோது யார் கூறியது இது?

(A) நற்றாய்
(B) செவிலி
(C) தோழி
(D) தலைவி
(E) விடை தெரியவில்லை

30. தலைமகன் அழகிய பூங்கொத்தினைத் தலைவிக்குக் கொடுப்பதால் தோன்றும் புணர்ச்சி எது?

(A) இயற்கைப் புணர்ச்சி
(B) புனல்தரு புணர்ச்சி
(C) களிறுதரு புணர்ச்சி
(D) பூத்தரு புணர்ச்சி
(E) விடை தெரியவில்லை

31. 'நல்யாழ் துணைமையோர் இயல்பு' எனப்படுவது யாது?

(A) கற்பு
(B) பிரமம்
(C) களவு
(D) ஆரிடம்
(E) விடை தெரியவில்லை

32. தவறானவற்றைத் தேர்வு செய்க

(A) மடலேறுதல் – 'காமம் மிக்க கழிபடர் கிளவி'
(B) வருணன் – முல்லை நிலம்
(C) உடன்போக்கு – தலைவி புறம் செல்லல்
(D) முருகன் – குறிஞ்சி நிலம்
(E) விடை தெரியவில்லை

33. நம்பி அகப்பொருள் சுட்டும் அறத்தொடு நிற்றலின் சரியான வரிசையை எழுதுக.

(A) தலைவி, பாங்கி, நற்றாய், செவிலி, தந்தை
(B) பாங்கி, செவிலி, நற்றாய், தலைவி, தந்தை
(C) தலைவி, பாங்கி, செவிலி, நற்றாய், தந்தை
(D) தந்தை, நற்றாய், செவிலி, பாங்கி, தலைவி
(E) விடை தெரியவில்லை

34. தவறான பொருத்தத்தைக் குறிப்பிடவும்.

(A) வெட்சி – எயில் வளைத்தல்

(B) கரந்தை – நிரை மீட்டல்

(C) வஞ்சி – வட்கார் மேல் செல்லல்

(D) நொச்சி – எயில் காத்தல்

(E) விடை தெரியவில்லை

35. தெய்வம் உணாவே மாமரம் புள்பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் ―――――――― என மொழிப

(A) முதல்

(B) கரு

(C) உரி

(D) உயிர்

(E) விடை தெரியவில்லை

36. 'தார்நிலை' என்னும் புறப்பொருள் துறை என்பது யாது?

(A) தும்பை மன்னனின் தேரின் நன்மையைச் சொல்லுதல்

(B) பகைவர்கள் சூழாது தனியே தன் மன்னனைக் காத்தல்

(C) குதிரையின் திறஞ்சொல்லுதல்

(D) இளங் களிற்றினது தறுகண்மையைச் சொல்லியது

(E) விடை தெரியவில்லை

37. 'ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே'
என்று சோழ மன்னர்களுக்கு அறிவுரை பகன்ற புலவர் யார்?

(A) ஔவையார்

(B) நக்கீரர்

(C) கழைதிண் யானையார்

(D) கோவூர்கிழார்

(E) விடை தெரியவில்லை

38. கோப்பெருஞ்சோழனுக்கும் அவனுடைய மக்களுக்கும் பகைமை ஏற்பட்டபோது தூதாகச் சென்றவர் யார்?

(A) புல்லாற்றூர் எயிற்றியனார்

(B) கபிலர்

(C) பரணர்

(D) அரிசில் கிழார்

(E) விடை தெரியவில்லை

39. மிகும் ஆரவாரத்தால் நிறைந்த கடல் போன்ற சேனையுடையான் இளங்களிற்றினது மறத்தைக் கூறியது எது?

(A) குதிரை மறம்

(B) தேர் மறம்

(C) எருமை மறம்

(D) யானை மறம்

(E) விடை தெரியவில்லை

40. பிசிராந்தையார் மீது காணாமலேயே நட்பு கொண்டிருந்த மன்னன் யார்?

(A) கோப்பெருஞ் சோழன்

(B) இராஜராஜ சோழன்

(C) இராஜேந்திர சோழன்

(D) குலோத்துங்க சோழன்

(E) விடை தெரியவில்லை

41. முச்சங்கங்கள் உண்மையே என்ற கருத்தினை உடையவர்?

(A) எஸ். வையாபுரிப்பிள்ளை

(B) பி.டி. சீனிவாச அய்யங்கார்

(C) கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்

(D) தேவநேயப்பாவாணர்

(E) விடை தெரியவில்லை

42. 'திருமுருகாற்றுப்படை நெடுநல்வாடை', இயற்றிய புலவர்

(A) கபிலர்

(B) ஔவையார்

(C) நக்கீரர்

(D) பரணர்

(E) விடை தெரியவில்லை

43. கீழ் கொடுக்கப்பட்டவற்றுள் தமிழ்ச்சொல் அல்லாதது எது?

(A) கழகம்
(B) குழாம்
(C) சங்கம்
(D) மன்றம்
(E) விடை தெரியவில்லை

44. கீழே கொடுக்கப்பட்டவர்களுள் முதற்சங்கத்தில் இருந்த புலவர்?

(A) நிதியின் கிழவன்
(B) தொல்காப்பியர்
(C) இருந்தையூர் கருங்கோழி
(D) திரையன் மாறன்
(E) விடை தெரியவில்லை

45. கீழ்க்காணும் அரசர்களில் கடைச் சங்கத்தைப் புரந்தவர் யார்?

(A) வெண்டேர் செழியன்
(B) உக்கிரப் பெருவழுதி
(C) காய்ச்சின வழுதி
(D) கடுங்கோன்
(E) விடை தெரியவில்லை

46. முத்தொள்ளாயிரம் ———— என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது.

(A) குறும்பு
(B) புறம்பு
(C) விருந்து
(D) அரும்பு
(E) விடை தெரியவில்லை

47. சேர நாட்டில் உருவான இரண்டு இலக்கியங்கள்

(A) அகநானூறு, புறநானூறு
(B) ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து
(C) குறுந்தொகை, பரிபாடல்
(D) குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு
(E) விடை தெரியவில்லை

48. அகநானூற்று மணிமிடைப் பவளத்தில் இடம்பெற்றுள்ள பாடல்கள்

(A) 121 முதல் 300 வரை

(B) 100 முதல் 200 வரை

(C) 110 முதல் 300 வரை

(D) 120 முதல் 300 வரை

(E) விடை தெரியவில்லை

49. 'மூதின் முல்லை' என்ற துறையை முன்வைத்து பின்வரும் கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்

(A) 'அடல்வேல் ஆடவர்க்கு மட்டுமின்றி, அவர் மனைவிக்கும் வீரம் உண்டு' என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.

(B) 'மூதில் மகளிர்' என்றால், முதிய மறக்குடியில் பிறந்த பெண்டிர் என்று பொருள்.

(C) ஒக்கூர் மாசாத்தியார் மூதின் முல்லை துறையில் பாடியுள்ளார்

(D) சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி இறந்த பிறகு அவன் மனைவி போர்க்களத்தில் வீரத்தை நிலைநாட்டினாள்

(E) விடை தெரியவில்லை

50. அகநானூறு பாடல்களை பாடிய புலவர்களின் எண்ணிக்கை

(A) 145

(B) 150

(C) 155

(D) 160

(E) விடை தெரியவில்லை

51. 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என்னும் அடி இடம்பெற்ற நூல்

(A) நெடுநல்வாடை

(B) மதுரைக் காஞ்சி

(C) முல்லைப்பாட்டு

(D) அகநானூறு

(E) விடை தெரியவில்லை

52. அகநானூற்றில் வரும் மருதத்திணைப் பாடல்களின் பகுப்பு முறைகள்

(A) 1, 3, 5, 7, 9 என வருவன

(B) 2, 8, 12, 18, 22 என வருவன

(C) 4, 14, 24, 34, 44 என வருவன

(D) 6, 16, 26, 36, 46 என வருவன

(E) விடை தெரியவில்லை

53. பத்துப்பாட்டில் ஆற்றுபடையாக அமைந்த புறநூல்கள் மொத்தம் எத்தனை?

(A) 6

(B) 3

(C) 5

(D) 7

(E) விடை தெரியவில்லை

54. அகநானூற்றில் 2,8 என்ற வரிசையிலமைந்த அகத்திணை நூல்?

(A) முல்லை

(B) மருதம்

(C) குறிஞ்சி

(D) பாலை

(E) விடை தெரியவில்லை

55. பத்துப்பாட்டிலுள்ள அனைத்து பாடல்களும் இயற்றப்பட்டுள்ள பா வகை எது?

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா

(D) கலிப்பா

(E) விடை தெரியவில்லை

56. பத்துப்பாட்டில் உருத்திரங்கண்ணனார் பாடிய இரு நூல்கள் எவை?

(A) பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை

(B) பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை

(C) முல்லைப்பாட்டு, மலைபடுகடாம்

(D) திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை

(E) விடை தெரியவில்லை

57. பொருத்துக

| | கலித்தொகை | | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|
| (a) | பாலைக் கலி | 1. | கபிலர் |
| (b) | குறிஞ்சிக் கலி | 2. | இளநாகனார் |
| (c) | மருதக் கலி | 3. | நல்லந்துவனார் |
| (d) | நெய்தற் கலி | 4. | பெருங்கடுங்கோ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

58. கீழ்க்காண்பனவற்றுள் தவறான இணை எது?

(A) குறுந்தொகை – பூரிக்கோ

(B) அகநானூறு – உருத்திரசன்மனார்

(C) ஐங்குறுநூறு – நல்லாவூர்க் கிழார்

(D) கலித்தொகை – நல்லந்துவனார்

(E) விடை தெரியவில்லை

59. சங்க இலக்கியங்களில், 'குறிஞ்சிப்பாட்டும், குறிஞ்சிக்கலியும்', இயற்றிய புலவர்

(A) கபிலர்

(B) அம்மூவனார்

(C) நக்கீரர்

(D) பரணர்

(E) விடை தெரியவில்லை

60. 'நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' என்று குறிப்பிடும் நூல்

(A) குறுந்தொகை

(B) நற்றினை

(C) ஐங்குறுநூறு

(D) அகநானூறு

(E) விடை தெரியவில்லை

61. 'தனிநிலை' என்று நன்னூலாசிரியரால் குறிப்பிடப்படுவது எது?

(A) ஐகாரம்

(B) ஔகாரம்

(C) குற்றியலிகரம்

(D) ஆய்தம்

(E) விடை தெரியவில்லை

62. பவணந்தி முனிவர் குறிப்பிடும் எழுத்திலக்கணத்தின் வகைகள்

(A) பத்து

(B) முப்பது

(C) இருபத்தியிரண்டு

(D) பன்னிரண்டு

(E) விடை தெரியவில்லை

63. மெய்மயக்கம் என்பது

(A) ஒரு மெய்க்குப் பதில் வேறொரு மெய்வருவது

(B) இரண்டு மெய்யெழுத்துக்கள் அருகருகே வருவன

(C) மெய்யெழுத்துக்கள் இல்லாமல் வருவது

(D) மெய்யெழுத்து உயிரெழுத்தாகத் திரிவது

(E) விடை தெரியவில்லை

64. தொல்காப்பியர் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் மாத்திரை அளவு

(A) கால் மாத்திரை

(B) அரை மாத்திரை

(C) ஒரு மாத்திரை

(D) இரண்டு மாத்திரை

(E) விடை தெரியவில்லை

65. நன்னூல் குறிப்பிடும் குற்றியலுகரம் மொத்தம்

(A) 34

(B) 37

(C) 35

(D) 36

(E) விடை தெரியவில்லை

66. தொல்காப்பியர் சுட்டும் சார்பெழுத்துகள் எத்தனை?

(A) 10

(B) 3

(C) 8

(D) 6

(E) விடை தெரியவில்லை

67. தமிழில் வழங்கப்பெறும் முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

(A) 20

(B) 30

(C) 18

(D) 12

(E) விடை தெரியவில்லை

68. பெயர்ச்சொல், ஏவல் சொல்லை வினையெச்ச சொல்லாக மாற்ற உதவும் அளபெடை

(A) உயிரளபெடை

(B) இன்னிசை அளபெடை

(C) சொல்லிசை அளபெடை

(D) செய்யுளிசை அளபெடை

(E) விடை தெரியவில்லை

69. 'ஐ' என்ற ஒலியை மொழி நூலார் எந்த ஒலியாகக் கருதுகின்றனர்?

(A) உயிரொலி

(B) கூட்டொலி

(C) மெய்யொலி

(D) தனியொலி

(E) விடை தெரியவில்லை

70. சங்க காலத் தமிழில் இடம் பெற்ற விகுதிகளை அதற்குரிய பெயருடன் பொருத்துக

(a) தொழிற் பெயர் விகுதி — 1. காணுமோர்

(b) துணை வினை விகுதி — 2. மன்ற

(c) பெயர்ப்பதிலி விகுதி — 3. இயர் அம் அய்

(d) இடைச்சொல் — 4. வேண்டும் வேண்டா

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

71. வெடிப்பொலியின் வேறு பெயர் என்ன?

(A) ஆடொலி

(B) தடையொலி

(C) உரசொலி

(D) மருங்கொலி

(E) விடை தெரியவில்லை

72. ஒரே ஒலிச்சூழலில் இரண்டு ஒலிகள் வந்து பொருள் வேறுபாடு ஏதுமின்றி இருவகை உச்சரிப்பாகக் கருதப்படுவது

(A) உறழ்ச்சி நிலை

(B) வேற்று நிலை

(C) சிக்கனக் கொள்கை

(D) ஒலிப்பு ஒப்புமை

(E) விடை தெரியவில்லை

73. தமிழில் ஒலியைக் குறிக்கும் வரி வடிவங்கள் எத்தனை?

(A) முப்பத்தொன்று

(B) நாற்பத்தொன்று

(C) இருபத்தொன்று

(D) பதினொன்று

(E) விடை தெரியவில்லை

74. பின்வருவனவற்றுள் படர்க்கை பன்மை அஃறிணை எது?

(A) நடந்தான்

(B) நடக்கின்றார்

(C) நடந்தன

(D) நடந்தேன்

(E) விடை தெரியவில்லை

75. விழைவு, காலம், ஒழியிசை என்ற பொருளில் வரும் இடைச்சொல்

(A) தில்

(B) கொல்

(C) மற்று

(D) உம்மை

(E) விடை தெரியவில்லை

76. 'யானையும் கோழியும் சங்கும் வாரணம்' – இது ....

(A) ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்

(B) பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்

(C) ஒரு பொருள் குறித்த பல உரித் திரிசொல்

(D) பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்

(E) விடை தெரியவில்லை

77. இரண்டாம் வேற்றுமை உருபு

(A) கண்

(B) ஒடு

(C) ஐ

(D) ஆல்

(E) விடை தெரியவில்லை

78. வேற்றுமை உருபுகளை வரிசைப்படுத்துக

(அ) இல், இன்

(ஆ) ஆல், ஆன், ஒடு, ஓடு

(இ) அது, ஆது, அ

(ஈ) கண், கால், கடை

(A) (ஈ), (அ), (ஆ), (இ)

(B) (ஆ), (அ), (இ), (ஈ)

(C) (அ), (ஆ), (இ), (ஈ)

(D) (இ), (அ), (ஈ), (ஆ)

(E) விடை தெரியவில்லை

79. உயர்திணைக்குரிய தெரிநிலை வினைமுற்று விகுதிகளைப் பொருத்துக :

| | வினைமுற்று | | விகுதிகள் |
|---|---|---|---|
| (a) | தன்மையொருமை வினைமுற்று | 1. | அம், ஆம், எம், ஏம் |
| (b) | தன்மைப்பன்மை வினைமுற்று | 2. | அர், ஆர், ப, மார் |
| (c) | படர்க்கை ஒருமை வினைமுற்று | 3. | கு, டு, து, று |
| (d) | படர்க்கைப் பன்மை வினைமுற்று | 4. | அன், ஆன், அள், ஆள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

80. கீழ்கண்டவற்றில் இரண்டாம் வேற்றுமையைக் குறிப்பிடுக.

(A) எலிக்குப் பூனை பகை

(B) இந்தியாவின் தென்முனை குமரி

(C) சோழன் காட்டை அழித்தான்

(D) தமிழ் பாரதியால் உயர்ந்தது

(E) விடை தெரியவில்லை

81. 'மருள்நீக்கியார்' என்னும் இயற்பெயரையுடையவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) பொய்கையாழ்வார்

(E) விடை தெரியவில்லை

82. இசையுலகில் <u>லயம்</u> என்னும் தாள வகைகள் நிறைந்த களஞ்சியமாகப் போற்றப்படும் நூல்.

(A) திருப்புகழ்
(B) கந்தர் அலங்காரம்
(C) கந்தர் அனுபூதி
(D) வேல்விருத்தம்
(E) விடை தெரியவில்லை

83. சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்ட இடம்

(A) காஞ்சிபுரம்
(B) திருவாரூர்
(C) திருவெண்ணெய் நல்லூர்
(D) திருவதிகை
(E) விடை தெரியவில்லை

84. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் ———— என்று அழைக்கப்படுவர்.

(A) மூவர் முதலிகள்
(B) வேந்தர்கள்
(C) முதல் மூவர்
(D) ஆச்சாரியார்
(E) விடை தெரியவில்லை

85. குருக்கத்தி மலரில் அவதரித்த ஆழ்வார்

(A) பொய்கையாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) (A), (B), (C) மூன்றும் தவறு
(E) விடை தெரியவில்லை

86. பொன்வண்ணத் தந்தாதி எந்தத் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது?

(A) ஒன்பதாம் திருமுறை
(B) பத்தாம் திருமுறை
(C) பதினொன்றாம் திருமுறை
(D) பனிரெண்டாம் திருமுறை
(E) விடை தெரியவில்லை

87. “ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனை நான்
இன்று மறப்பேனோ? ஏழைகாள் !”

என்ற பாடல் வரிகளைப் பாடிய ஆழ்வார்

(A) பூதத்தாழ்வார்
(B) பொய்கையாழ்வார்
(C) ஆண்டாள்
(D) பெரியாழ்வார்
(E) விடை தெரியவில்லை

88. “அகத்தீசர் சதகம்” என்னும் நூலை எழுதியவர் யார்?

(A) உமறுப்புலவர்
(B) தாயுமானவர்
(C) குணங்குடி மஸ்தான் சாகிபு
(D) இராமலிங்க அடிகள்
(E) விடை தெரியவில்லை

89. திருக்குற்றாலக் குறவஞ்சி தோன்றிய ஆண்டு

(A) கி.பி. 1715
(B) கி.பி. 1813
(C) கி.பி. 1817
(D) கி.பி. 1736
(E) விடை தெரியவில்லை

90. பிள்ளைத் தமிழுக்கான யாப்புவகை

(A) வஞ்சிப்பா
(B) ஆசிரியப்பா
(C) விருத்தம்
(D) வெண்பா
(E) விடை தெரியவில்லை

91. முதன் முதலில் தோன்றிய கலம்பக நூல்

(A) நந்திக் கலம்பகம்
(B) திருவருணைக் கலம்பகம்
(C) திருக்காவலூர்க் கலம்பகம்
(D) சுந்தரவனக் கலம்பகம்
(E) விடை தெரியவில்லை

92. ஜான் பனியனின் ‘துறக்கப் பயணம்’ நூலைத் தமிழ்ப்படுத்தியவர்

(A) எச்.ஏ. கிருட்டிணன்
(B) வேதநாயகம்
(C) உவின்ஸ் லோ
(D) கால்டுவெல்
(E) விடை தெரியவில்லை

93. தமிழில் முதலில் தோன்றிய குறவஞ்சி நூல்

(A) விதுரன் குறம்
(B) திருக்குற்றாலக் குறவஞ்சி
(C) மீனாட்சியம்மை குறம்
(D) முருகன் குறவஞ்சி
(E) விடை தெரியவில்லை

94. “உருவே என்உறவே என்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே”

என்று உள்ளம் உருகப்பாடிய சமயக் குரவர் யார்?

(A) திருநாவுக்கரசர்
(B) சுந்தரம்
(C) மாணிக்கவாசகர்
(D) திருஞானசம்பந்தர்
(E) விடை தெரியவில்லை

95. சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் எத்தனை?

(A) 14
(B) 13
(C) 16
(D) 17
(E) விடை தெரியவில்லை

96. ‘சித்தாந்தம்’ என்பதன் பொருள்

(A) முடிந்த முடிபு
(B) தொடங்குதல்
(C) தொடங்கி வைத்தல்
(D) ஆரம்ப நிலை
(E) விடை தெரியவில்லை

97. பெரியபுராணத்தில் கோயில் அமைந்த இடம் ———————— என்று அழைக்கப்பட்டது.

(A) கூடாரம்
(B) அம்பலம் பொதியில்
(C) சத்திரம்
(D) வனம்
(E) விடை தெரியவில்லை

98. காங்கேயன் குறவஞ்சியை இயற்றியவர்

(A) பொன்மணி செல்லப்பன்
(B) தத்துவ லிங்கன்
(C) சொக்கலிங்கம்
(D) திரிகூடராசப்பக் கவிராயர்
(E) விடை தெரியவில்லை

99. ஞானதீபக் கவிராயர் என்னும் பட்டம் பெற்றவர்

(A) வேதநாயகம் பிள்ளை
(B) ஹெச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை
(C) முத்துச்சாமி பிள்ளை
(D) வேதநாயக சாஸ்திரி
(E) விடை தெரியவில்லை

100. “உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்” எனப்பாடியவர்

(A) சுந்தரர்
(B) அப்பர்
(C) திருஞானசம்பந்தர்
(D) மாணிக்கவாசகர்
(E) விடை தெரியவில்லை

101. பொருத்துக

(a) மூதுரை — 1. சிவப்பிரகாசர்

(b) வெற்றிவேற்கை — 2. முனைப்பாடியார்

(c) நன்னெறி — 3. அதிவீரராமபாண்டியர்

(d) அறநெறிச்சாரம் — 4. ஒளவையார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

102. ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு –
இப்பாடல் வழி புலப்படுவது

(A) உழவுத்தொழிலின் சிறப்பு
(B) வாணிபத்தின் சிறப்பு
(C) அரச வாழ்வு நலம்
(D) இயற்கை வளம்
(E) விடை தெரியவில்லை

103. 'கற்பக மரத்தை ஒத்தவர்' என்று குமரகுருபரர் யாரைக் குறிப்பிடுகிறார்?

(A) செல்வந்தர்
(B) அரசர்
(C) அமைச்சர்
(D) சான்றோர்
(E) விடை தெரியவில்லை

104. பாரதியின் ஆத்திச்சூடியோடு பொருந்தாதது எது?

(A) விலங்குக்கு அஞ்சேல்

(B) சாவதற்கு அஞ்சேல்

(C) கீழோர்க்கு அஞ்சேல்

(D) தொன்மைக்கு அஞ்சேல்

(E) விடை தெரியவில்லை

105. அகர வரிசையில் ஓர் எழுத்துக்கு ஒரு பாடலாக மொத்தம் 108 பாடல்கள் இடம்பெற்றுள்ள ஔவையாரின் நூல்

(A) கொன்றை வேந்தன்

(B) மூதுரை

(C) ஆத்திசூடி

(D) நல்வழி

(E) விடை தெரியவில்லை

106. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?

(A) விளம்பி நாகனார்

(B) பூதஞ்சேந்தனார்

(C) கணி மேதாவியார்

(D) காரியாசான்

(E) விடை தெரியவில்லை

107. உத்தரவேதம் என அழைக்கப்படும் நூல்

(A) நாலடியார்

(B) திருக்குறள்

(C) இனியவை நாற்பது

(D) பழமொழி நானூறு

(E) விடை தெரியவில்லை

108. நூல்களை நூலாசிரியர்களோடு சரியாகப் பொருத்துக.

(a) நான்மணிக்கடிகை — 1. கபிலர்

(b) முதுமொழிக்காஞ்சி — 2. பதுமனார்

(c) நாலடியார் — 3. விளம்பி நாகனார்

(d) இன்னா நாற்பது — 4. கூடலூர் கிழார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

(E) விடை தெரியவில்லை

109. ஔவையார் எழுதிய 'நல்வழி' என்ற நூல் எத்தனை வெண்பாக்களால் ஆனது?

(A) கடவுள் வாழ்த்து நீங்கலாக 100 வெண்பாக்கள்

(B) கடவுள் வாழ்த்து நீங்கலாக 39 வெண்பாக்கள்

(C) கடவுள் வாழ்த்து நீங்கலாக 99 வெண்பாக்கள்

(D) கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 வெண்பாக்கள்

(E) விடை தெரியவில்லை

110. நாலடியாரின் ஆசிரியர் யார்

(A) பொய்கையார்

(B) விளம்பி நாகனார்

(C) மதுரைக் கூடலூர் கிழார்

(D) சமண முனிவர்கள்

(E) விடை தெரியவில்லை

111. பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள தொகை நூல்

(A) திருக்குறள்
(B) நாலடியார்
(C) நான்மணிக்கடிகை
(D) பழமொழி
(E) விடை தெரியவில்லை

112. திருவள்ளுவரின் உருவத்தை முதன்முதலாக ஓவியமாக வரைந்தவர்

(A) ரவிவர்மன்
(B) வேணுகோபாலசர்மா
(C) சு. வேணுகோபால்
(D) ரவிசர்மா
(E) விடை தெரியவில்லை

113. நாலடியார் பாடல்களை அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாக தொகுத்துத் தந்தவர்

(A) தருமர்
(B) கணிமேதாவியார்
(C) பதுமனார்
(D) பூதஞ்சேந்தனார்
(E) விடை தெரியவில்லை

114. கைந்நிலை எனும் நூலை இயற்றியவர்

(A) பெருவாயின் முள்ளியார்
(B) முன்றுறையரையனார்
(C) புல்லங்காடனார்
(D) கணிமேதாவியார்
(E) விடை தெரியவில்லை

115. பின்வருவனவற்றுள் சரியான தொடரைத் தேர்வு செய்க :

(i) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் நீதிநூல்கள்

(ii) பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் சில நீதிநூல்கள் ஆகும்

(iii) பதினெண்கீழ்கணக்கு நூல்களில் காப்பியம் ஒன்று உள்ளது

(A) (i) மட்டும் சரி
(B) (ii) மட்டும் சரி
(C) (iii) மட்டும் சரி
(D) (i), (ii), (iii) மூன்றும் சரி
(E) விடை தெரியவில்லை

116. கீழ்க்கணக்கு நூல்களில் அமையும் வனப்பு எது?

(A) அம்மை
(B) அழகு
(C) விருந்து
(D) தொன்மை
(E) விடை தெரியவில்லை

117. நான்மணிக்கடிகை எனும் நூல் இயற்றப்பட்ட காலம் எது?

(A) சங்க காலம்
(B) சங்க மருவியகாலம்
(C) காப்பிய காலம்
(D) சிற்றிலக்கிய காலம்
(E) விடை தெரியவில்லை

118. நாலடியார் நூலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

(A) 30
(B) 35
(C) 45
(D) 40
(E) விடை தெரியவில்லை

119. கோடிட்ட இடத்தை நிரப்புக.

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய ———————— என்ப

(A) முதுமொழி
(B) குறளியல்
(C) பண்ணத்தி
(D) பிசி
(E) விடை தெரியவில்லை

120. 'விருந்தோம்பல்' என்பதற்கு 'உண்ணும் காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ண வேண்டும்' என்று பொருள் விளக்கம் தந்தவர்

(A) பரிமேலழகர்
(B) மணக்குடவர்
(C) பரிதி
(D) தெய்வச் சிலையார்
(E) விடை தெரியவில்லை

121. புறப்பொருள் வெண்பாமாலை எந்த நூலுக்கு வழிநூலாக உள்ளது?

(A) தொல்காப்பியம்
(B) புறநானூறு
(C) புறநிலை
(D) பன்னிருபடலம்
(E) விடை தெரியவில்லை

122. தலைமாராயம் என்பது எத்திணைக்குரியது?

(A) வெட்சித்திணை
(B) வஞ்சித்திணை
(C) கரந்தைத் திணை
(D) காஞ்சித் திணை
(E) விடை தெரியவில்லை

123. “சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய;

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப”

என்ற பாடலில் பயின்று வரும் பொருள்கோள் யாது ?

(A) கொண்டு கூட்டுப் பொருள் கோள்

(B) மொழி மாற்றுப் பொருள் கோள்

(C) நிரல் நிறைப் பொருள் கோள்

(D) யாற்று நீர்ப் பொருள் கோள்

(E) விடை தெரியவில்லை

124. வெளிநாட்டார் ஒருவரால் தமிழில் எழுதப்பட்ட முதல் ஐந்திலக்கண நூல் ———— ஆகும்

(A) நேமிநாதம்

(B) வீர சோழியம்

(C) தொன்னூல் விளக்கம்

(D) இலக்கண விளக்கம்

(E) விடை தெரியவில்லை

125. தொல்காப்பியத்தையும், வடமொழி இலக்கண நூல்களைப் பின்பற்றி இலக்கணத்தைக் கூறுவது

(A) வீர சோழியம்

(B) நேமிநாதம்

(C) வச்சணந்தி மாலை

(D) சூடாமணி

(E) விடை தெரியவில்லை

126. புத்த மித்திரரை ஆதரித்த மன்னன்

(A) வீர சோழ மன்னன்

(B) குலோத்துங்க சோழன்

(C) செங்குட்டுவன்

(D) நெடுஞ்செழியன்

(E) விடை தெரியவில்லை

127. “தண்டியலங்காரம்” நூலின் இயல்கள் வைப்பு முறை

(A) பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல்

(B) பொருளணியியல், சொல்லணியியல், பொதுவணியியல்

(C) பொதுவணியியல், சொல்லணியியல், பொருளணியியல்

(D) சொல்லணியியல், பொதுவணியியல், பொருளணியியல்

(E) விடை தெரியவில்லை

128. தண்டியலங்கார எடுத்துக்காட்டுப் பாடல்களில் முன்னிலைப்படுத்திப் பாடப்பட்ட மன்னன்

(A) இராச இராச சோழன்

(B) இராசேந்திர சோழன்

(C) குலோத்துங்க சோழன்

(D) அநபாய சோழன்

(E) விடை தெரியவில்லை

129. சிற்றெல்லையாய் இரண்டு அடிகளையும் பேரெல்லையாய் பன்னிரெண்டு அடிகளையும் கொண்ட “பா” வகை

(A) ஆசிரியப்பா

(B) கலிப்பா

(C) வெண்பா

(D) வஞ்சிப்பா

(E) விடை தெரியவில்லை

130. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை

(A) செப்பலோசை

(B) தூங்கலோசை

(C) துள்ளலோசை

(D) செந்தாழிசை

(E) விடை தெரியவில்லை

131. செய்யுளுறுப்புகள் யாவை?

(A) எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை

(B) பா வகைகள்

(C) புற நடைகள்

(D) வண்ணம்

(E) விடை தெரியவில்லை

132. புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் எப்பொருள் பற்றி இயற்றப்பட்டது?

(A) வெண்பா இலக்கணம்

(B) சிற்றிலக்கியம்

(C) பாட்டியல் இலக்கணம்

(D) புறத்திணை இலக்கணம்

(E) விடை தெரியவில்லை

133. நம்பியகப் பொருள் சுட்டும் பாங்கற் கூட்டத்தின் வகை எத்தனை?

(A) 6

(B) 7

(C) 5

(D) 8

(E) விடை தெரியவில்லை

134. தொல்காப்பியர் குறிப்பிடும் 'வண்ணம்' ———————— வகைகள் ஆகும்.

(A) இருபது

(B) எட்டு

(C) நாற்பது

(D) பதினாறு

(E) விடை தெரியவில்லை

135. கீழ்க்கண்டவற்றைப் பொருத்திச் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

| சுவைகள் | | வகைகள் |
|---|---|---|
| (a) | நகை | 1. புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் |
| (b) | அழுகை | 2. எள்ளல், இளமை, பேதமை, மடன் |
| (c) | இளிவரல் | 3. இளிவு, இழவு, அசைவு, வறுமை |
| (d) | மருட்கை | 4. மூப்பு, பிணி, வருத்தம், மென்மை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

(E) விடை தெரியவில்லை

136. வடவேங்கடம், தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் - எனக் கூறும் நூல் ________ ஆகும்.

(A) தொல்காப்பியம்

(B) சிறையனார் களவியல் உரை

(C) நன்னூல்

(D) வீரசோழியம்

(E) விடை தெரியவில்லை

137. இலக்கண நூல்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியர்களையும் தொடர்புபடுத்துக.

| | இலக்கண நூல்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| (a) | நன்னூல் | 1. | புத்தமித்திரர் |
| (b) | யாப்பருங்கலக்காரிகை | 2. | பவணந்தியார் |
| (c) | வீரசோழியம் | 3. | குணவீரபண்டிதர் |
| (d) | நேமிநாதம் | 4. | அமிதசாகரர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

(E) விடை தெரியவில்லை

138. உத்திகளின் எண்ணிக்கையினை நன்னூலார் ———————— கூறுகிறார்.

(A) 32
(B) 30
(C) 34
(D) 35
(E) விடை தெரியவில்லை

139. எஃகு, கஃபு, இருபஃது - என்பதன் இலக்கணத்தைக் கூறுக.

(A) குற்றியலிகரம்
(B) ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
(C) வன்றொடர் குற்றியலுகரம்
(D) மென்றொடர் குற்றியலுகரம்
(E) விடை தெரியவில்லை

140. பிரிவுக்கு நிமித்தங்களாகக் கூறப்படுவன

(A) காவல், பொருட்பிரிவு, பகை

(B) வேண்டல், ஓதல், ஈதல்

(C) ஓதல், பகை, தூது

(D) பரத்தையிற் பிரிவு, பொருட் பிரிவு, ஓதல் பிரிவு

(E) விடை தெரியவில்லை

141. மொழியின் அமைப்பியல்களை வரிசைப்படுத்தி நோக்கினால் அந்த மொழியின் ________________ தானாக அமைந்துவிடுகிறது என்றார் மொழியியல் அறிஞர் ப்ளூம்ஃபீல்டு.

(A) தன்மை

(B) வரலாறு

(C) பெரும்பகுதி

(D) செழுமை

(E) விடை தெரியவில்லை

142. தமிழ் எழுத்துக்களைக் கண்ணெழுத்துக்கள் எனச் சுட்டும் காப்பியம்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவகசிந்தாமணி

(D) வளையாபதி

(E) விடை தெரியவில்லை

143. மாறுபடும் ஒரே மொழியின் பல்வேறு வடிவங்களை எவ்வாறு அழைக்கிறோம்?

(A) உருபன்கள் அல்லது மாற்று வடிவங்கள் என்கிறோம்

(B) காலவடிவங்கள் அல்லது அமைப்பு முறைகள் என்கிறோம்

(C) திசைமொழிகள் அல்லது வட்டார வழக்குகள் என்கிறோம்

(D) ஒலிமாற்றங்கள் அல்லது புணர்ச்சி மாற்றங்கள் என்கிறோம்

(E) விடை தெரியவில்லை

144. கூற்று : மொழி கருவிலேயே அமைந்து வருவதன்று

காரணம் : மொழி என்பது மக்கள் முயன்று கற்கும் ஒன்று

(A) கூற்று சரி காரணம் தவறு
(B) காரணம் சரி கூற்று தவறு
(C) கூற்று காரணம் இரண்டும் சரி
(D) கூற்று காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

145. கூற்று : பழைய இசைத்தமிழ் நூல்கள் இறந்துவிட்டன.

காரணம் : மக்களுக்குள் ஒழுக்கச் சீர்திருத்தஞ் செய்யப்புகுந்த போலியாசிரியர் சிலர்

(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) காரணம் சரி, கூற்று தவறு
(C) கூற்று, காரணம் இரண்டும் சரி
(D) கூற்று, காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

146. "உயர்ந்த இலக்கியங்கள் இருத்தலை நோக்கி அந்த மொழி மிகச்சிறந்த மொழி என்று கூறலாகாது" – என்ற அறிஞர்

(A) ரிச்சர்ட்சன்
(B) பிரீல்
(C) யெஸ்பர்ஸன்
(D) வெண்ட்ரியே
(E) விடை தெரியவில்லை

147. நடுத்திராவிட மொழிக் குடும்பத்தைச் சாராத மொழி எது ?

(A) தெலுங்கு
(B) கோண்டி
(C) கூயி
(D) பிராகூய்
(E) விடை தெரியவில்லை

148. பின்வருவனவற்றுள் திருந்தா திராவிட மொழி எது ?

(A) துளு

(B) குடகு

(C) தூதம்

(D) கன்னடம்

(E) விடை தெரியவில்லை

149. கிளைமொழி என்பது

(A) கலப்புமொழி

(B) ஒரு குறிப்பிட்ட பேச்சுமொழி வகை

(C) மேலைநாட்டார் பேசும்மொழி

(D) வடமொழி

(E) விடை தெரியவில்லை

150. திராவிடக் குடும்ப மொழிகளுள் குரல் வளைத் தடையொலி அதிகமாகப் பயின்று வரும் மொழிகள்

(A) கோண்டா, குவி, குயி

(B) கோண்டி, கௌமி, நாயக்கி

(C) தமிழ், மலையாளம், கன்னடம்

(D) தெலுங்கு, துளு, பிராகுயி

(E) விடை தெரியவில்லை

151. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று போற்றப்படுபவர்

(A) ஜான் பெர்சிவல்

(B) டாக்டர் கால்டுவெல்

(C) ஸ் கிரேட்டர்

(D) எம். பஹ்லர்

(E) விடை தெரியவில்லை

152. ''கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் எமனோ' – பற்றிய கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

(1) திராவிட மொழிக்குடும்பமான 'தோடா' என்ற மொழி பற்றிய தனி ஆய்வை மேற்கொண்டார்

(2) பர்ஜி மொழியும், பெங்கோ மொழியும் திராவிட மொழிக்குடும்பத்தின் தனிக் கிளைமொழிகள் என்று கண்டறிந்தார்

(3) பரோ என்ற அறிஞரோடு இணைந்து 'திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி' ஒன்றினைத் தயாரித்து வெளியிட்டார்.

(A) கூற்று (1), (2) ஆகிய இரண்டு மட்டும் சரியானவை

(B) கூற்று (2), (3)ஆகிய இரண்டு மட்டும் சரியானவை

(C) கூற்று (1), (3) ஆகிய இரண்டு மட்டும் சரியானவை

(D) கூற்று (1), (2), (3) ஆகிய அனைத்தும் சரியானவை

(E) விடை தெரியவில்லை

153. இந்தியாவில் வழங்கும் மொழிக் குடும்பங்கள் மொத்தம் எத்தனை?

(A) ஆறு  (B) மூன்று

(C) நான்கு  (D) எட்டு

(E) விடை தெரியவில்லை

154. கீழ் உள்ளவற்றுள் சரியான தொடர்களைத் தேர்வு செய்க.

(i) திராவிட மொழிக்குடும்பத்துள் தமிழ்மொழி அடங்கும்

(ii) தமிழ் என்ற சொல் தொல்காப்பியத்தில் இல்லை

(iii) சங்கம் என்ற சொல் தொல்காப்பியத்தில் இல்லை

(A) (i), (ii) சரி  (B) (i), (iii) சரி

(C) (ii), (iii) மட்டும் சரி  (D) (i), (ii), (iii) மூன்றும் சரி

(E) விடை தெரியவில்லை

155. பின்வருவனவற்றுள் தவறானவற்றைத் தேர்வு செய்க.

(A) போர்த்துக்கீசியச் சொல் – சன்னல்

(B) பாரசீகச் சொல் – பக்கிரி

(C) அரேபியச் சொல் – தர்பார்

(D) இந்துஸ்தானிச் சொல் – பஞ்சாயத்து

(E) விடை தெரியவில்லை

156. பொருத்துக

(a) கசாயம், கிச்சடி, குண்டான் — 1. அரபு

(b) சுருங்கை, கன்னல், ஓரை — 2. மராத்தி

(c) வசூல், இலாக்கா, ரத்து — 3. போர்ச்சுகீசியம்

(d) கடுதாசி, அலமாரி, சாவி — 4. கிரேக்கம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

(E) விடை தெரியவில்லை

157. பின்வருவனவற்றில் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு செல்லாத சொல் எது?

(A) கட்டுமரம்

(B) கயிறு

(C) காசு

(D) இலை

(E) விடை தெரியவில்லை

158. கூற்று : தமிழில் பிறமொழி சொற்கள் கலக்கும்போது சில சிக்கல்கள் உருவாகின்றன.

காரணம் : தமிழில் இல்லாத ஒலிகளை உடைய பிறமொழி சொற்களை எழுதுவதில் சிக்கல் உருவாகிறது.

(A) கூற்று காரணம் இரண்டும் தவறு
(B) கூற்று தவறு காரணம் சரி
(C) கூற்று சரி காரணம் தவறு
(D) கூற்று காரணம் இரண்டும் சரி
(E) விடை தெரியவில்லை

159. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கீழ்வருவனவற்றுள் தமிழ்ச்சொல் அல்லாதது எது ?

(A) ஆணை
(B) அழன்
(C) புழன்
(D) தாழக்கோல்
(E) விடை தெரியவில்லை

160. பின்வருவனவற்றுள் திருந்திய மொழி எது ?

(A) தூதம்
(B) கோடம்
(C) துளு
(D) கந்த்
(E) விடை தெரியவில்லை

161. 'ராஜி' என்னும் நெடுங்கதைப் புத்தகத்தை எழுதியவர்.

(A) எஸ். வையாபுரிப்பிள்ளை
(B) ரா.பி. சேதுப்பிள்ளை
(C) வ.வே.சு. ஐயர்
(D) உ.வே. சாமிநாத ஐயர்
(E) விடை தெரியவில்லை

162. ‘மணிமேகலை உரைக்குறிப்பு’ எழுதியவர் யார்?

(A) உ.வே. சா

(B) டாக்டர் மு. வரதராசனார்

(C) சி.என். அண்ணாதுரை

(D) மறைமலையடிகள்

(E) விடை தெரியவில்லை

163. நீதி நூல்களில் எந்த நூல் ‘மொழி பெயர்ப்பு நூல்’ என்னும் பெருமைக்குரியதாகிறது

(A) முதுமொழிக்காஞ்சி

(B) திரிகடுகம்

(C) ஏலாதி

(D) ஆசாரக் கோவை

(E) விடை தெரியவில்லை

164. கவிதையில் உள்ள அடி, சீர், தளை முதலானவற்றிற்கு இணையானவற்றை வேறு மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதை ———— என்பர்.

(A) எதுகை மோனை மொழிபெயர்ப்பு

(B) ஒலிபெயர்ப்பு

(C) சந்த மொழிபெயர்ப்பு

(D) தழுவல் மொழிபெயர்ப்பு

(E) விடை தெரியவில்லை

165. ‘இந்திய இதழியலின் தந்தை’ என போற்றப்படுபவர்

(A) ஜேம்ஸ் அகடஸ்டஸ் ஹிக்கி

(B) வில்லியம்ஸ்

(C) பெர்சிவல் பாதிரியார்

(D) எஸ்.எஸ். வாசன்

(E) விடை தெரியவில்லை

166. எழுத்தும் நடையும் புதுக்கவிதைக்கு ஒத்திகை நடத்திய காலம்

(A) கி.பி. 1930 – 1940

(B) கி.பி. 1940 – 1950

(C) கி.பி. 1960 – 1970

(D) கி.பி. 1980 – 1990

(E) விடை தெரியவில்லை

167. ‘தனித்தமிழ் நாடு’ எனும் கொள்கையுடைய கவிஞர்

(A) வாணிதாசன்

(B) கம்பதாசன்

(C) பெருஞ்சித்திரனார்

(D) முடியரசன்

(E) விடை தெரியவில்லை

168. ‘பெண்மைதான் தெய்வீகமாம் காட்சியடா’ என்று பெண்மையின் சிறப்பைப் பாடியவர்

(A) பாரதிதாசன்

(B) பாரதியார்

(C) கவிமணி

(D) நாமக்கல் கவிஞர்

(E) விடை தெரியவில்லை

169. ‘சொலவடை’ என்பதன் பொருள் யாது?

(A) பழமொழி

(B) பழங்கதை

(C) கதைப்பாட்டு

(D) விடுகதை

(E) விடை தெரியவில்லை

170. ‘நாட்டுப்புற நம்பிக்கைகள்’ என்னும் நூலை எழுதியவர்

(A) தமிழவன்

(B) சு. சக்திவேல்

(C) மு. சண்முகம் பிள்ளை

(D) லூர்து

(E) விடை தெரியவில்லை

171. ‘குடிலன்’, ‘பொய்கையார்’ என்ற கதாப்பாத்திரங்கள் இடம்பெறும் நாடகங்கள் யாவை?

(A) மனோன்மணீயம், சபாபதி

(B) நந்தனார் சரித்திரம், கவியின் கனவு

(C) மனோன்மணீயம், மானவிஜயம்

(D) நந்தனார் சரித்திரம், உயிரோவியம்

(E) விடை தெரியவில்லை

172. ‘காலவெள்ளம்’ என்ற புதினத்தின் ஆசிரியர் யார்?

(A) மாற்கு

(B) இராஜ்கௌதமன்

(C) இந்திரா பார்த்தசாரதி

(D) சிவகாமி

(E) விடை தெரியவில்லை

173. ‘தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்’ என்று பாராட்டப்படுபவர்

(A) சி.சு. செல்லப்பா

(B) கு. அழகிரிசாமி

(C) பி.எஸ். ராமையா

(D) மௌனி

(E) விடை தெரியவில்லை

174. அண்ணாமலை அரசர் பரிசு பெற்ற நா. பார்த்தசாரதியின் புதினப் படைப்பு எது?

(A) தங்கை எங்கே போகிறாள்?

(B) நெஞ்சின் அலைகள்

(C) பெண்

(D) துளசிமாடம்

(E) விடை தெரியவில்லை

175. ‘தருக்கு’ என்னும் புதினத்தை எழுதியவர் யார்?

(A) சிவகாமி
(B) பாமா
(C) சிவசங்கரி
(D) பாக்யா
(E) விடை தெரியவில்லை

176. ‘நாங்கள் நிர்வாணத்தை விற்கிறோம்
ஆடை வாங்குவதற்காக’
- இந்தக் கவிதையை எழுதியவர்?

(A) அப்துல் ரகுமான்
(B) நா. காமராசன்
(C) மு. மேத்தா
(D) ஈரோடு தமிழன்பன்
(E) விடை தெரியவில்லை

177. ‘மஞ்சணத்தி’ என்னும் கரிசல் வட்டார கவிதை நூலின் ஆசிரியர்

(A) கனிமொழி
(B) தமிழச்சி தங்கபாண்டியன்
(C) பாமா
(D) ஆண்டாள் பிரியதர்ஷினி
(E) விடை தெரியவில்லை

178. 1891 ஆம் ஆண்டு தமிழில் வெளியான காப்பிய நாடகம் யாது?

(A) பிரதாப முதலியார் சரித்திரம்
(B) மனோன்மணீயம்
(C) சுகுண சுந்தரி
(D) ஓர் இரவு
(E) விடை தெரியவில்லை

179. கடலோர மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி எழுதப்பட்ட புதினம் எது?

(A) கூட்டுக்குஞ்சுகள்
(B) மானாவரி மனிதர்கள்
(C) கரிப்பு மணிகள்
(D) ஏறு வெயில்
(E) விடை தெரியவில்லை

180. 'பெண் மதிமாலை' எனும் நூலின் ஆசிரியர் யார்?

(A) ராஜம்
(B) முன்சீப் வேதநாயகம்
(C) பாரதியார்
(D) பாரதிதாசன்
(E) விடை தெரியவில்லை

181. "வினையினும் பெயரினும் நினையத் தோன்றி
சொல் வேறு நிலைஇ பொருள் வேறு நிலையல்"
——————— இவ்வகைப் பொருள் கோளைச் சார்ந்தது.

(A) மொழிமாற்றுப் பொருள்கோள்
(B) நிரல்நிறைப் பொருள்கோள்
(C) சுண்ணப் பொருள்கோள்
(D) அடிமறி மாற்றுப் பொருள்கோள்
(E) விடை தெரியவில்லை

182. எடுத்த பொருளுக்கு ஏற்றவாறு சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும்முறை

(A) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(B) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
(C) பூட்டுவிற் பொருள்கோள்
(D) நிரனிறைப் பொருள்கோள்
(E) விடை தெரியவில்லை

183. பாரி பாரி என்று பல ஏத்தி

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனும் அல்லன்

மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே

- மேற்கண்ட பாடலின் சரியான அணி இலக்கணத்தைத் தேர்ந்தெடுக்க

(A) வேற்றுமையணி

(B) தற்குறிப்பேற்றணி

(C) வேற்றுபொருள் வைப்பணி

(D) வஞ்சப் புகழ்ச்சி அணி

(E) விடை தெரியவில்லை

184. உள்ளுறை-யின் இலக்கணம் யாது?

(A) (i) அகப்பாடல்களில் மட்டும் வரும்

(ii) கருப் பொருட்களின் அடிப்படையில் பிறக்கும்

(iii) குறிப்பாகப் பொருளை உணர்த்தும்

(B) (i) அகப்பாடல்கள் மட்டும் வரும்

(ii) கருப்பொருள் இன்றி வரும்

(iii) உவமையே பொருளை புலப்படுத்தும்

(C) (i) கருப்பொருட்களின் அடிப்படையில் பிறக்காது

(ii) நான்கு அடிகள் கொண்டிருக்கும்

(iii) ஈரசைச்சீர் பெற்று வரும்

(D) (i) குறிப்பாக பொருளை உணர்த்தும்

(ii) உவமை குறைவின்றி முழுமையாக இருக்கும்

(iii) மூவகைச்சீர்களைக் கொண்டிருக்கும்

(E) விடை தெரியவில்லை

185. கீழ்க்காணும் கருத்தில் எது சரி? எது தவறு என்பதைப் புலப்படுத்துக.

(1) வந்த சொல்லே பின்னர்ப் பலவிடத்து வரின் சொற்பின் வரின் சொற்பின் வரு நிலையணியாம்.

(2) சொற்பின்வருநிலையணிக்கு விபாவனையணி என்ற வேறு பெயரும் உண்டு.

(A) (1) தவறு (2) சரி

(B) (1) சரி (2) சரி

(C) (1) தவறு (2) தவறு

(D) (1) சரி (2) தவறு

(E) விடை தெரியவில்லை

186. நன்னூல் சொல்லதிகாரம் எத்தனை வகை பொருள்கோள்களைச் சுட்டுகின்றது

(A) ஐந்து

(B) ஆறு

(C) ஏழு

(D) எட்டு

(E) விடை தெரியவில்லை

187. உவமையைப் பழித்து உவமிப்பது எது?

(A) புகழ் உவமை

(B) நிந்தை உவமை

(C) நியம உவமை

(D) ஐய உவமை

(E) விடை தெரியவில்லை

188. "மாரி யன்ன வண்கை" - இது எவ்வகை உவமை?

(A) வினை உவமை

(B) பயன் உவமை

(C) மெய்யுவமை

(D) உரு உவமை

(E) விடை தெரியவில்லை

189. வலி இல் நிலைமையான் வல் உருவம் பெற்றும்

புலியின் தோல் போர்த்து மேய்ந்த அற்று.

- இக் குறள் எவ்வகை அணியைச் சார்ந்தது

(A) பிறிது மொழிதல் அணி

(B) எடுத்துக்காட்டு உவமையணி

(C) இல்பொருள் உவமையணி

(D) வேற்றுமையணி

(E) விடை தெரியவில்லை

190. உவமானம், உவமேயம் என்னும் இரண்டிற்கும் பேதமின்றி தோன்றுவது எது ?

(A) உவமையணி

(B) உருவக அணி

(C) தற்குறிப்பேற்ற அணி

(D) வஞ்சப்புகழ்ச்சி அணி

(E) விடை தெரியவில்லை

191. மயன் என்ற புனைப்பெயரில் கவிதைகள் படைத்தவர்

(A) புதிய மாதவி

(B) க.நா. சுப்பிரமணியம்

(C) தருமு சிவராம்

(D) பசுவய்யா

(E) விடை தெரியவில்லை

192. கீழ்க்காணும் கவிஞர்களில் மணிக்கொடி இதழில் எழுதாதவர் யார் ?

(A) கலாப்ரியா

(B) ந. பிச்சமூர்த்தி

(C) கு.ப. ராஜகோபாலன்

(D) புதுமைப்பித்தன்

(E) விடை தெரியவில்லை

193. பயனுவமைக்கு எடுத்துக்காட்டு

(A) அரிமாவன்ன அணங்குடைத்துப்பின்

(B) மாரியன்ன வன்கை

(C) வேல்புரை பனைத்தோள்

(D) பவளத்தன்ன மேனி

(E) விடை தெரியவில்லை

194. 'அரிமா வன்ன அணங்குடைத் துப்பில்' - இது எவ்வகை உவமை?

(A) பண்புவமை

(B) தொழிலுவமை

(C) பயன் உவமை

(D) பொருள் உவமை

(E) விடை தெரியவில்லை

195. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது எப்பாவிற்குச் சிறப்பு?

(A) வெண்பா

(B) வஞ்சிப்பா

(C) ஆசிரியப்பா

(D) கலிப்பா

(E) விடை தெரியவில்லை

196. எதுகை மோனையின்றி வரும்பாட்டு...

(A) அந்தாதித்தொடை

(B) இரட்டைத்தொடை

(C) செந்தொடை

(D) இயைபுத்தொடை

(E) விடை தெரியவில்லை

197. பொருத்துக:

(a) தரவு — 1. கூன்

(b) தாழிசை — 2. வாரம்

(c) தனிச்சொல் — 3. எருத்தம்

(d) சுரிதகம் — 4. இடைநிலைப் பாட்டு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

(E) விடை தெரியவில்லை

198. செய்யுளில் சீர்களையோ, அடிகளையோ ஒன்றோடொன்று தொடுப்பது ______________ எனப்படும்.

(A) சீர்

(B) அடி

(C) எழுத்து

(D) தொடை

(E) விடை தெரியவில்லை

199. சிந்தியல் வெண்பா எத்தனை அடிகளை உடையது?

(A) பலவடி

(B) மூன்றடி

(C) நான்கடி

(D) இரண்டடி

(E) விடை தெரியவில்லை

200. தொல்காப்பியர் 'கைக்கிளை வெண்பா' என்ற வெண்பா வகையுள் அடக்கிய பாவகை

(A) வஞ்சிப்பா

(B) மருட்பா

(C) கலிப்பா

(D) ஆசிரியப்பா

(E) விடை தெரியவில்லை